செ. கு. எண்: 122 நாள் :02.11.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 2.11.2015

2.8.2015 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கொளிக்கமுத்தி யானைகள் முகாம் அருகில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையை சேர்ந்த திரு. ராமன் என்பவரின் மகன் ஈஸ்வரன்;

4.8.2015 அன்று நீலகிரி மாவட்டம், காப்பிக்காடு அருகே பந்தலூர் வட்டம், சேரங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. தாமஸ் என்பவரின் மகன் ரபேல்;

13.9.2015 அன்று வயல்வெளியில் நடந்து வந்து கொண்டிருந்த, வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மோர்தானா பகுதியை சேர்ந்த திரு. லட்சுமிபதி என்பவரின் மகன் திரு. தாராசிவன்;

1.10.2015 அன்று நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு கிராமம், கொளப்பள்ளி அருகே சேரங்கோடு கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம்;

–– ஆகியோர் காட்டு யானைகள் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த ஈஸ்வரன், ரபேல், தாராசிவன் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**